பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி

சென்னை – 4

20-08-2025 7.15 PM

புதன்கிழமை இரவு

## ஆகாஷவாணி செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

- சிறந்த குடியரசு துணைத் தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் செயல்படுவார் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- ஆன்லைன் விளையாட்டுக்களை ஒழுங்குப்படுத்த வகை செய்யும் மசோதா இன்று மக்களவையில் நிறைவேறியது.
- தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 64 ஆயிரம் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- ஆப்கானிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது.
- ஆசியக் கோப்பை ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

- இனி விரிவான செய்திகள் -

சிறந்த குடியரசு துணைத் தலைவராக திரு சி பி ராதாகிருஷ்ணன் செயல்படுவார் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், திரு சி பி ராதாகிருஷ்ணன் வேட்பு மனுதாக்கல் செய்த புகைப்படத்தையும் பகிர்ந்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணியும் திரு சி பி ராதாகிருஷ்ணன் சிறப்பாக செயல்படுவார் என்ற நம்பிக்கை கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் ஊக்கம் அளிக்கும் வகையில் அவரது செயல்பாடு இருக்கும் என்று திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>><><><><<

ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குப்படுத்த வகை செய்யும் சட்ட மசோதா மக்களவையில் நிறைவேறியது.

முன்னதாக மத்திய அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசினார்.

ஆன்லைன் விளையாட்டுகளுக்கான ஆணையம் ஒன்றை ஏற்படுத்த இதில் வகை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பணம் வைத்து விளையாடுவதற்கு தடை விதிப்பதற்கான அம்சங்களும் இதில் இடம்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

இதனை மீறுபவர்களுக்கு 3 ஆண்டு சிறைத்தண்டனை மற்றும் 1 கோடி ரூபாய் வரை அபராதமும் அல்லது இவ்விரண்டையும் சேர்ந்து விதிக்க வகை செய்யப்பட்டுள்ளதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்ட போது எதிர்க்கட்சிகள் பீகாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிராக கோஷமிட்டனர்.

அப்போது பேசிய மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா இந்த மசோதா முக்கியமானது என்று குறிப்பிட்டார்.

நிதி இழப்புகள் மற்றும் தற்கொலைகளை தடுப்பதற்கு ஏதுவாக கொண்டு வரப்பட்டுள்ள இந்த மசோதா மீதான விவாதத்தில் எதிர்க்கட்சிகள் பங்கேற்கவேண்டும் என்று அவர் கோரினார்.

இந்த மசோதாவை கொண்டு வரவேண்டும் என்று பல்வேறு உறுப்பினர்கள் வலியுறுத்தியதையும் திரு ஓம் பிர்லா சுட்டிக்காட்டினார்.

>><><><><<

கூட்டுறவுத் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின் போது இதைத் தெரிவித்துள்ள அவர், நாடுமுழுவதும் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

இதன் சேவைகள் 2 லட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துக்களுக்கு சென்றடைவதாக அவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள கிராமங்களுக்கும் இதன் சேவை சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு அமித் ஷா கூறினார்.

>><><><><<

அசாமில் இந்தியா நிர்வாகவியல் மையத்தை ஏற்படுத்த வகை செய்யும் சட்ட திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இதன்படி இந்த மையம் கவுகாத்தியில் ஏற்படுத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><><<

டிஜிட்டல் பண பரிவர்த்தனையில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா, 2017 ஆம் ஆண்டு ஆயிரத்து 962 லட்சம் கோடி ரூபாயாக இருந்த டிஜிட்டல் பண பரிவர்த்தனை, கடந்த நிதியாண்டில் 3 ஆயிரத்து 509 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைநோக்கு பார்வையுடன் செயல்படுத்திய டிஜிட்டல் இந்தியா இயக்கமே இதற்கு காரணம் என்றும் திரு நட்டா கூறியுள்ளார்.

>><><><><<

சத்தீஷ்கரில் 29 நக்ஸலைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

தண்டேவாடா மாவட்டத்தில் 21 பேரும், நாராயண்பூர் மாவட்டத்தில் 8 பேரும் பாதுகாப்புப் படையினர் முன் சரணடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சரணடைந்த நக்ஸலைட்டுகளில் 10 பேர் பெண்கள் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

இவர்களுக்கு 55 லட்சம் ரூபாய் பரிசுத் தொகை அறிவிக்கப்பட்டு இருந்ததாகவும் அம்மாவட்ட காவல்துறை தெரிவித்துள்ளது.

சரணடைந்தவர்களுக்கு மறுவாழ்வு நிவாரணமாக தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

>><><><><<

ஆப்கானிஸ்தானில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது.

Herat மாகாணத்திற்கு உட்பட்ட பகுதியில் பேருந்து, இருசக்கர வாகனம் மற்றும் சிறிய லாரி ஒன்றன் பின் ஒன்று மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு காவல் துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தினால் பேருந்து தீப்பிடித்து எரிந்ததன் காரணமாக, உயிரிழந்தோரை அடையாளம் காணும் பணியில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக காவல் துறை கூறியுள்ளது.

>><><><><<

பெருவுக்கு மனிதாபிமான அடிப்படையில் 32 டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பியுள்ளது.

பெருவில் நீர்ச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளியுறவுத் துறையின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

>><><><<

இயற்கை உர பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கும் வகையில் பிரதமரின் Pranam திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மண்வளத்தை மேம்படுத்தி, சுற்றுச்சூழல் மாசுப்பாட்டை குறைத்து வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கிலான இந்த திட்டம் குறித்து நாடுமுழுவதும் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கனகமாசத்திரம் அருகே விவசாயிகளுக்கான கருத்தரங்கம் இன்று நடைபெற்றது.

இந்த திட்டம் தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது என்று இதில் பங்கேற்ற விவசாயிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – விவசாயிகள் – 63 செகண்ட்ஸ்)

>><><><<

தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் 64 ஆயிரம் புதிய தொழில் முனைவோர்கள் உருவாக்கப்பட்டுள்ளதாக சிறு, குறு தொழில் துறை அமைச்சர் திரு தா மோ அன்பரசன் கூறியுள்ளார்.

இன்று சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவர்களுக்கு 5 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கடனுதவி வழங்கப்பட்டு இருப்பதாக தெரிவித்தார்.

இதில் 2 ஆயிரத்து 57 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

>><><><><<

ஜம்மு கஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து முதலமைச்சர் திரு உமர் அப்துல்லா அதிகாரிகளுடன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

ஸ்ரீநகரில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கூட்டத்தில் சரக்கு மற்றும் சேவை வரி குறித்த விவரங்களையும் முதலமைச்சர் கேட்டறிந்தார்.

நிதித்துறை முதன்மை செயலர் நிதி நிலைமை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக எடுத்துரைத்தார்.

>><><><><<

ஜப்பானுடனான உறவை மேலும் வலுப்படுத்த விரும்புவதாக தென்கொரிய பிரதமர் திரு Kim Min Seok கூறியுள்ளார்.

இன்று சியோலில் தம்மை சந்தித்த ஜப்பான் பிரதிநிதிகள் இடையே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த குழுவினர் கொரியா-ஜப்பான் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக சியோல் வந்திருப்பதாகவும் திரு Kim Min Seok கூறினார்.

கொரியாவுடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக ஜப்பான் குழுவினர் தெரிவித்தனர்.

>><><><><<

## விளையாட்டுச் செய்திகள்

ஆசியக் கோப்பை ஹாக்கி போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹர்மன் பிரித்சிங் தலைமையிலான இந்த அணியில் 20 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி பீஹாரில் வரும் 29 ஆம் தேதி தொடங்கி 7 ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

-------------------

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் சுமித் மாலிக் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

பல்கேரியாவின் Samokov-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் Tapsya -யும், 68 கிலோ எடைப்பிரிவில் Srashiti –யும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் பிரியாவும், 55 கிலோ எடைப்பிரிவில் ரீனாவும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 2 தங்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

கஸகஸ்தானின் Shymkent -ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் சீனியர் பிரிவில் Avant Jeet Singh Naruka தங்கப்பதக்கம் வென்றார்.

ஜூனியர் 10 மீட்டர் பிரிவில் வன்ஷிகா சவுத்திரி - ஜோனதன் கவின் ஆண்டனி இணை தங்கப்பதக்கம் வென்றது.

கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 8 தங்கம், 5 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

>> End of News <<